நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.187 /2021

அரசு தரப்புக்காக அ.சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயந்தி | தொழில்/ பதவி | |
| கணவர் பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : LW 2 | | | |

எதிரிகள் ஆஜரில் இருந்தனர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

16th day of May 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 5.36 )

நான் தற்போது மேல்பட்டாம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது மகள். 12.12.2018 அன்று என் மகளை 1வது எதிரிக்கு திருமணம் செய்து முதல் எதிரியின் வீட்டில் வசித்து வந்தார். 2019–ம் வருடம் ஜூலை மாதம் தேதி தெரியாது எனது மகள் அ.சா..1 4 மாத கர்ப்பமாக இருந்தார். அந்த சமயத்தில் சத்து மாத்திரை என்று சொல்லி அவரது கணவர் 1–ம் எதிரி கொடுத்த மாத்திரையை எனது மகள் சாப்பிட்டாள் என்றும் மாத்திரை சாப்பிட்ட பிறகு தான் படுத்துவிட்டதாகவும் காலை எழுந்து பார்த்தவுடன் 2வது எதிரி சுந்தரமூர்த்தி என்பவர் எனது மகள் அ.சா.1 பக்கத்தில் படுத்திருந்ததை பார்த்துவிட்டு எனது மகளின் கணவர் 1–ம் எதிரியிடம் கேட்டதற்கு என்னை மன்னித்துவிடு நான் இனிமேல் இதுபோல் செய்யமாட்டேன். வெளியே சொல்லாதே சொன்னால் நான் ஏதாவது செய்துகொள்வேன். உனது அம்மா, அப்பா ஏதாவது செய்து கொள்வார்கள். வெளியே சொல்லாதே என்று சொன்னதாகவும் 2020ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு பிறகு 2–வது நிகழ்ச்சி நடந்த பிறகும் 2021–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எனது மகள் என்னிடம் சொன்னார். 2020–ம் ஆண்டு டிசம்பர் மாதம் எனது மகள் அ.சா.1–ஐ 3வது எதிரி மணிகண்டனுடன் உடலுறவில் ஈடுபடவேண்டும்

என்று சொல்லி இல்லாவிட்டால் குழந்தையை ஏதாவது செய்து விடுவேன் என்றும் நான் ஏதாவது பண்ணிக்கொள்வேன் என்று 1–ம் எதிரி சொன்னதாக என் மகள் என்னிடம் சொன்னாள். 2021–ம் ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் 3–ம் எதிரி மணிகண்டனை எனது மருமகன் 1–ம் எதிரி அழைத்து வந்து எனது மகளிடம் அவருடன் இருக்க வேண்டும் என்று சொன்னபோது எனது மகள் அதை மறுத்து எனக்கு போன் செய்தார். எனது கணவருக்கு நான் போன் செய்த பிறகு நானும் எனது கணவரும் சென்று எனது மகள் அ.சா.1–ஐ கூட்டிக்கொண்டு வந்துவிட்டோம். அதன்பிறகு என்ன செய்வது என்று எங்களுக்கு அசிங்கமாக இருந்தது. பின்னர் கடைசியாக முடிவெடுத்து பண்ருட்டி மகளிர் காவல்நிலையத்தில் நானும் எனது மகள் அ.சா.1, எனது கணவரும் சென்று ஜெயமணி (எ) ஏழுமலை, மணிகண்டன், சுந்தரமூர்த்தி ஆகிய 3 எதிரிகள் மீதும் புகார் கொடுத்தோம். போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள். எனது மகளை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பண்ருட்டி மகளிர் காவல்நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுத்தோம் என்றால் ஜனவரி 31–ம் தேதி புகார் கொடுத்தோம். எனது மகளுக்கும் 1–ம் எதிரிக்கும் திருமணம் நடந்த பிறகு எனது மகளுக்கு வளைகாப்பு செய்தோமா என்றால் செய்தோம். 2019–ம் ஆண்டு டிசம்பரில் செய்தோம். எந்த இடத்தில் வளைகாப்பு செய்தோம் என்றால் பண்ருட்டியில் உள்ள 1–ம் எதிரியின் வீட்டில் செய்தோம். புகார் கொடுத்த பிறகு எனது மகளுக்கும் 1–ம் எதிரிக்கும் பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடைபெற்றது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நானும் சென்றேன். வழக்கு நிலுவையில் இருக்கும்போதே எனது மகளுக்கு 2வது திருமணம் செய்தோமா என்றால் செய்தோம். எனது மகள் என்னிடம் எதிரிகளை பற்றி சொன்னபிறகு நான் பண்ருட்டி சென்று விசாரித்தேனா என்றால் நான் பெற்ற மகள் என்னிடம் சொன்னதை வைத்து நான் எதுவும் விசாரிக்கவில்லை. என் மகள் சொன்னதை வைத்து நான் புகார் கொடுக்க போனேன் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சுப்ரமணிய சிவா அ.சா.1–ன் அப்பாவா என்றால் நான் 2–வதாக திருமணம் செய்து கொண்டேன். அ.சா.1–ன் அப்பா பெயர் செல்வம் மகன் சிவா. நானும் என் கணவரும் 1–ம் எதிரியின் சொத்தை பிரித்துக்கொண்டு வீட்டுடன் மாப்பிள்ளையாக வர கேட்டோம் என்றும் அதை 1–ம் எதிரி மறுத்ததால் புகாரில் பொய்யான வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பட்டாம்பாக்கத்தில் இருந்து எல்லார்பாளையம் எவ்வளவு தூரம் என்றால் 10லிருந்து 15 கி.மீ இருக்கும். எனது மகள் எனது வீட்டிற்கு வரவேண்டும் என்றால் எப்படி

வருவார் என்றால் நான் தான் சென்று கூட்டி வருவேன். அவ்வாறு நான் அழைத்துவரும் போது பண்ருட்டி காவல் நிலையத்தை தாண்டி தான் பட்டாம்பாக்கத்தில் உள்ள எனது வீட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். மாதம் ஒருமுறை நானும் எனது கணவரும் எனது மகள் அ.சா.1–ஐ சென்று பார்ப்போம் என்றால் எப்போது நினைக்கிறோமோ அப்போது செல்வோம். எனது மகள் அ.சா.1 செல்போன் பயன்படுத்தி வந்தாரா என்றால் பயன்படுத்தி வந்தார். எனது மகளுக்கு செல்போனை எப்போதாவது தான் 1–ம் எதிரி கொடுப்பார். குப்பு என்ற என்னுடைய நாத்தனார் 1–ம் எதிரி வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதே ஊரில் இருப்பதால் குப்பு எனது மகளை அடிக்கடி பார்க்க செல்வார் என்று சொன்னால் சரியல்ல. வளைகாப்பு எனது மகளுக்கு நடத்திய போதோ நான் எனது மகளை 1–ம் எதிரி வீட்டில் சென்று பார்க்கும்போதோ எனது மகள் எந்த விவரங்களையும் சொல்லவில்லை என்றால் சரிதான். வளைகாப்பு முடிந்த பின்பு பிரசவத்திற்காக பாண்டிச்சேரி மருத்துவமனையில் எனது மகளை சேர்த்து பிரசவம் முடிந்த பிறகு 2 மாதம் எனது மகளை எங்கள் வீட்டில் வைத்திருந்ததோம் என்று சொன்னால் சரிதான். அப்போது 2 மாதங்கள் எங்கள் வீட்டில் என் மகள் இருந்தபோது அவர் இந்த வழக்கு சம்மந்தமான எந்த விவரங்களையும் எங்களிடம் கூறவில்லை என்றால் சரிதான். பாண்டிச்சேரி மருத்துவமனையில் பிரசவத்திற்கு எனது மகளை சேர்த்தபோது 1–ம் எதிரியும் அவரது உறவினர்களும் பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். 2020–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் லாக்டவுன் செய்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எங்கள் பகுதியில் இருந்து யாரும் வெளியே செல்லமுடியாது என்றால் சரிதான். நாங்கள் கொரோனா ஊரடங்கு போட்டபிறகு வண்டியில் சென்று அரிசி, காய்கறி வாங்கி கொடுத்துவிட்டு பார்த்துவிட்டு வருவோம். அவ்வாறு பார்க்கும்போது எனது மகள் எங்களிடம் எந்த விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரிதான். அக்கம்பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். 1–ம் எதிரிக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றும் அந்த வீட்டில் 1–ம் எதிரியின் தந்தை குடியிருந்து வருகிறார் என்றும் சொன்னால் சரிதான். அந்த வீட்டின் பாதி பாகத்தை 1–ம் எதிரியின் தங்கைக்கு 1–ம் எதிரி பாகம் கொடுப்பதாக சொன்னதை எனது மகள் ஏற்க மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது உறவினர் ரங்கா என்பவர் காவல்துறையில் பணியில் உள்ளார் என்றால் சரிதான். முழு வீட்டையும் எனது மகள் பெயரில் எழுதி வைக்கவேண்டும் என்றும் அவ்வாறு எழுதிவைக்கவில்லை என்றால் நான் வேறு திருமணம் செய்து கொள்வேன் என்று எனது மகள் 1–ம் எதிரியிடம் பிரச்சனை செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 எதிரிகள் 1–ம் எதிரியின் நண்பர்கள் என்று எனக்கு தெரியும். 2,3 எதிரிகள் 1–வது எதிரிக்கு ஆதரவாக போலிஸ் ரங்கா என்பவர் 1–ம் எதிரியிடம் பேச வந்தபோது 1–ம் எதிரிக்கு ஆதரவாக 2,3 எதிரிகள் பேசி வந்தபோது அங்கு பிரச்சனை ஏற்பட்டு நாங்கள் காவல் நிலையத்தில் முறையிட போகிறோம் என்று கூறிய போது 2,3 எதிரிகளை ரங்கா

என்பவர் ஆலோசனையின் பேரில் இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 06.15)

2025 ஆம் ஆண்டு மே திங்கள் 16 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.